DUPLICATE

புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

விரோதி ஞு (1889) ஆவணி மீ உஉஉ ஆரம்பமானது.

| பத்திரக் கிரயம். | |
|---|---|
| (முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.) | |
| யாழ்ப்பாணப்பட்டினம்: ஞூ ச-க்கு | ரூ. உ-உசி. |
| வெளியூர், இந்தியா: " | ரூ. ௬-உசி. |
| தொலைப்பகுதி: " | ரூ. ௬-எசி. |
| தனிப்பிரதி சதம் | -0சி. |

# THE HINDU ORGAN.

## குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| விளம்பர விகிதம். | | ரூ. ச. |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | எ-இ0. |
| " | அரைக்கலம் | ச-இ0. |
| " | கால்கலம் | உ-இ0 |
| " | ஒருஅங்குலம் | -இ0. |
| அடுத்தமுறைகட்கு விகிதங்களில் தளர்ச்சி | | |

புத்தகம் - உஎ. { யாழ்ப்பாணம்:— நளஞூ சித்திரைமீ அஉ; ககஙகூ ம்ஆூ ஏப்பிரல்மீ உ0உ. } இலக்கம்— ௪0

உ
கணபதிதுணை.

சீர்பூத்த கருவிது வுணர்ச்சி தேங்கச் சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேழு மதம்பூத்த விநாயகன்ருள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

THE CHEAPEST HOUSE
FOR HIGH CLASS SILK CLOTHS.

நம்பிக்கையும், நாணயமும், சகாயமுமான பட்டு வர்த்தகசாலை எது?

காசியிற் பிரபல பட்டுவர்த்தகர்களாகிய
கே. எஸ். முத்தையா கம்பெனியார்
என்று தெரிந்துகொள்ளுங்கள்.

இங்கு, அநேக நவீன கலர்களிற் புதுமாதிரியான பட்டுப்புடைவைகள், ரவிக்கைக் குட்டைகள், தாவணிகள், பிள்ளை (பஞ்சகாறு) வேட்டிகள், தலைக்குட்டைகள், சார்மடித் தினிசுகள், வெண்பட்டு தோத்தி, அங்க வஸ்திரம், சோமன் ஜோடி முதலிய பலவிதமான பட்டாடைகளுஞ் சகாயமான விலைக்குச் சித்தமாக விருக்கின்றன. விபரமான கேட்லாக் விரும்பினுல் இனுமாகப் பெற்றுக்கொள்ளலாம். உடனே எழுதுங்கள்.

**K. S. Muthiah & Co.,**
"Silk House",
BENARES, CITY.

## பனைமரங்கள்.

நூறு பனை மரங்களிலிருந்து ருOO ரூபா பெறுமதியான வரும்படி பெறலாம்.

இது நூறு மரங்களிலிருந்து வரக்கூடிய வரும்படியின் சராசரி மதிப்பு. இது தென்னைகளிலிருந்துவரக்கூடிய வரும்படியிலும் அதிகம். தக்க முயற்சி செய்தால் யாழ்ப்பாணத்திலே இலங்கையின் மற்றெந்தப் பகுதிகளிலும்பார்க்கப் பனைமரங்களிலிருந்து அதிக லாபம் பெறலாம்.

இடைவிடாது கள்ளுக் கட்டினுல் மரத்துக்குமரம் வித்தியாசமின்றி எந்தமரத்திலும் ஒரேமாதிரியாகக் கள்ளுச் சேர்க்கலாம். முதல் வருஷத்தில் இப்படி இல்லாதிருக்கக்கூடும் ஆனுல் இரண்டாம் வருஷத்தில் எந்த மரத்திலும் கள்ளு நல்லாய்ச் சேர்க்கலாம் இரண்டாம் வருஷப் பலனையடைவதற்கு முதலாம்வருஷத்தில் நல்லவேலை செய்ய வேண்டும்.

இரண்டாம்வருஷத்தில் நூறு நாட்களுக்காகுதல் ஒவ்வொரு மரத்திலுமிருந்து ஒவ்வொரு கலன் கள்ளுச் சேர்க்கலாம். ஆகவே நூறு மரங்களிலிருந்து க0,COO கலன் கள்ளுச் சேர்க்கலாம்.

ஒவ்வொரு கலன் கள்ளிலிருந்தும் ஒன்றேடு ஐந்திலொரு ருத்தல் பனங்கட்டி செய்யலாம். ஆனுல் ஒருருத்தல் வீதப்படி கணக்கிட்டாலும் க0,COO ருத்தல் அல்லது உOO கண்டி பனங்கட்டி செய்யலாம்.

குறைந்தபட்சமாக கண்டி ஒன்று ரூபா உடுவீமதாகப்பார்த்தாலும் நூறு மரங்களிலிருந்து ருOO ரூபா வரும்படி பெறலாம்.

இதைப்பற்றி முழுவிபரங்களு மடங்கியுள்ள பிரபந்தங்களை எங்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—
இலங்கைச் சீனிக் கம்பனியார்,
வல்லுவெட்டித்துறை.

கட்பார்வை.

குளிர்ச்சியான சந்திரகாந்த வில்லைபோட்ட
கண்ணுடிகளைப் பாவித்துப்
பார்வையைக் காப்பாற்றுங்கள்.
திறமான மூக்குக் கண்ணுடிகள்
எங்களிடம்
சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எம் கல்லையா அன் சன்ஸ்,
பறங்கித்தெரு,
யாழ்ப்பாணம்

**S. U. N. & Co.**
**Weaving Silk Manufacturers.**
**BENARES CITY, U. P.**

பெரிய கம்பெனி. நாணயமான சரக்குகள்

இந்தக் கம்பெனியில் செய்வாகிற உத்தமமான பனுரிஸ் பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், பஞ்சாறு, காஷ்மீர் போர்வைகள், ருத்திராட்சங்கள், குழந்தைகளின் விளையாட்டுச்சாமான்கள் முதலான அபூர்வமான சாமான்களைப் பற்றிய




68 பக்கமுள்ள ஒரு "காட்லாக்"கும் ஒரு காணைபரவர் கயதும் கோருகிறவர்களுக்கு இனுமாய் அனுப்பப்படும்.

எஸ்.யூ.என். அண்டு கம்பெனி,
பனுரிஸ் ஸிற்றி.

பம்பாய்ச் சேலைகள்.

மிகவும்நாணயமானது! மிகவும்சரசமானது!!
16 முழ நீளம்.



இந்தச் சேலைகள் சேர்த்தியான வெள்ளை மல்லில் மத்தியில் மாங்காய், அன்னம், கிளி, சூரியப் பிறை, சந்திரப் பிறை, நக்ஷத்திரம், புட்டாக்கள்; இவை கன்போல்ஒவ்வொரு சேலைகளிலும் ஒவ்வொருவிதமுண்டு. கரைகளிலும் முந்தானைகளிலும் விசித்திரமான புஷ்பக் கொடிகள் போட்டிருக்கும். இந்தச் சேலைகள் பம்பாயிலிருந்து ஸ்பெஷலாகக் கொஞ்சந்தான் தருவித்திருக்கிறோம். வேண்டியவர்கள் கூடிய சீக்கிரத்திற தருவித்துக்கொள்ளவும். கொட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்ப முடியாது. சேலை 1-க்கு கிரயம் ரூபா 2, அணு 4.

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட்,
மதராஸ்.

ஆறுமுகநாவலரவர்களால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்ட
தமிழ்ப்புத்தகங்கள்
வண்ணூர்பண்ணைச்
சைவப்பிரகாசவித்தியாசாலையில்
விற்கப்படும்.
V. P. போஸ்றில் அனுப்பவேண்டுவோர்
தபாற்செலவுமாத்திரம் முற்றி அனுப்பல்
வேண்டும்.



கேச ரஞ்சித தைலம்.

இதனை இடைவிடாது பாவித்தால் மயிர் உதிர மாட்டாது. தலை மொட்டையாதலாலுண்டாகும் அவலக்ஷணம் நீக்கும்; மயிர் கோதுவதற்கு இதனைப் பாவித்துவந்தால் மயிருதிராதபடி செய்யும்; சொடுகை நீக்கும்; சொறியில்லாதபடி செய்யும்; மயிருக்குச் செழுமை செய்யுங் கிருமிகளைக் கொல்லும்; மண்டையைச் சுத்தப்படுத்தி அதிலுள்ள மயிரை நன்கு வளரச் செய்யும். மயிர் கோதுவதற்கும், மருந்தாகவும் இந்தியாவிலுள்ள மேல்வகுப்புப் பெண்களுள் இலட்சக் கணக்கானேர் இந்தக் கேசரஞ்சித தைலத்தைப் பாவிக்கிருர்கள். ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்க ளடங்கியுள்ள "கேசரஞ்சிடயறி"யை அனுப்பும்படி எழுதுங்கள்.

| | |
|---|---|
| விலை புட்டி ஒன்று | ரூபா க. |
| கட்டுக்கூலி, தபாற்செலவு | அணு டு. |
| மூன்று புட்டி | ரூபா ௩, அணு அ. |
| கட்டுக்கூலி, தபாற்செலவு | அணு கக. |

குஜராட் அல்லது வயிற்றுளைவுக்கு விசேஷ ஒளஷதம்.

இது காய்ச்சல், வயிற்றூதல் முதலிய குணங்களோடு சேர்ந்த வயிற்றுளைவை வேரோடு களையும். இரத்தக்குறைவு, பெலவீனம், இரத்தக் கழிச்சல், வயிற்றுக்கடுப்பு, வயிற்றுக்கழிச்சல், போசனப்பிரியவீனம் முதலியனவற்ரேடுசேர்ந்த வயிற்றுளைவை இது அதிசயப்படத்தக்க விதமாகச் சொஸ்தப்படுத்திவிடும். எந்தவயது ரோயாளரும் இதனைப் பாவிக்கலாம். வயோதிபருக்கு இதுபோன்ற மருந்து வேறில்லை.

இரண்டு புட்டிகுளிகைகளுக்கும், ஒருபுட்டி கலவைக்கும் (இரண்டு கிழமைக்குப் பாவிக்கத்தக்கது) விலை ரூபா ௩.
கட்டுக்கூலி, தபாற்கூலி அணு கக.

சித்த மகரத் துவச.

இது தங்கத்திலிருந்து சாஸ்திரமுறைப்படி நீற்றப்பட்ட மருந்து எவ்வித காத்தையும் இது சொஸ்தமாக்கும்; பசிக்குறைவை நீக்கும். எவ்விதமான பலதுவலியையும் போக்கடிக்கும். மூச்சுப்பையி லுண்டாகும் எவ்வித ஒழுங்கீனத்தையு மகற்றிச் சிரணக்கருவிகளை ஒழுங்குபடுத்திவிடும். இது நரம்புகளுக்குப் பெலனைக் கொடுத்து எவ்வித கஷ்டத்தையும் தொந்தரவையும் சரீரம் பொறுக்கத் தக்கதாகச் செய்கின்றது. மானுடரின் நன்மைகருதிச் சிவபெருமானுல் சித்தர்களுக்கு இது அருளப்பட்டமையால் இதற்குச சித்தர் மகாத்துவச என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு தோலா | ரூபா அ0. |
| ஒருகிழமைக்குப் போதியது | ரூபா ௩. |

எமது மருந்துகளின் கீர்த்தி உலகப் பிரசித்தமானது. மருந்தெண்ணெய்கள், நெய்கள், மகரத்துவஜம், கஸ்தூரி முதலிய எங்கள் ஆயுள்வேத மருந்துகள் மிகவுஞ்சிறந்தன வென்பதும், மலிவானவையென்பதும் மறுக்கப்படா உண்மையேயாகும்.

வியாதிகளினதும் மருந்துகளினதும் விபரங்களடங்கிய "கற்லக்கு"கள் வேண்டியவர்களுக்கு இனுமாயனுப்பப்படும்.

வியாதிகளைப்பற்றிச் சுருக்கமாயெழுதியறிவித்தால் மருந்தோடு அல்லது மருந்தில்லாமல் இந்தியா, பேர்மா, இலங்கை, தொலை யிராச்சியம் முதலியஇடங்களுக்கு "பிறிஸ்கிறிப்ஷன்"(Prescreption) அனுப்பப்படும்.

KAVIRAJ N. N. SEN,
GOVT. MEDICAL DIPLOMA HOLDER,
18-1 & 19, Lower Chitpur Road,
CALCUTTA.

விளம்பரம்.

## இந்துஸ்தான் ஐக்கிய விமாச்சங்கம்.

கல்கத்தா இந்துஸ்தான் கட்டடங்களில் இதன் பிரதான ஆபீசு வைத்து நடத்தப்படுகின்றது.

பம்பாய், சென்னை, பஞ்ஜாப், இலங்கை, தொடுவாயிராச்சியப்பகுதி முதலிய இடங்களில் இதற்குக் கிளை ஆபீசுகளுண்டு.

இந்தியாவில் பங்காளிகளுக்கு அதிக லாபத்தைக் கொடுக்கக்கூடிய விமாச் சங்கம் இதுவே.

இந்தியாவில் சனங்களின் சொந்த விமா ஆபீசு இதுவன்றி வேறில்லை.

இதைப்பற்றிய விபரங்கள் பின் சொல்லப்படுபவருக்கெழுதி யறிந்துகொள்ளலாம்.

இலங்கையின் பலபாகங்களில் முகாமைக்காரர் தேவை. விரும்புவோர் அறிவிப்பார்களாக.

M. A. TAMPOE, BROS.,
Chief Agents for Ceylon,
No. 13B, First Cross Street,
COLOMBO.

ஓடுகளும் சிமெந்தும்




பெருந் தொகையான ஓட்டு மார்க்குச் சிமெந்தும், பேர்பெற்ற மங்களூர் ஓடுகளும், இரட்டை யானை மார்க்கு ஓடுகளும் விலைக்கிருக்கின்றன. வந்து பாருங்கள்.

யோசேப் அன் கம்பேனி,
தேவரீர்க் குளத்துக்கு முற்பக்கம்,
யாழ்ப்பாணம்.

ஒப்பந்தக் கேள்விக் கடுதாசிகள்.

1916—19.

1916௵ ஐப்பசி௴ 1௳ தொடக்கம், 1919௵ புரட்டாதி௴ 30௳ வரைக்கும் ஒன்று, இரண்டு, அல்லது மூன்றுவருஷங்களுக்கு, கணத்தையிலிருக்கும் அரசாட்சியாரது பசுவின் வைசூரிப்பால் எடுக்குமிடத்திற்குத்தேவையான பசுக்கன்றுகளை வாடகைக்குவிட ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள், 1916௵ வைகாசி௴ 2௳ மத்தியானம்பன்னிரண்டுமணிவரைக்கும் கொந்திருத்து விசாரணைச் சங்கத் தலைவரால், கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் வேண்டிய விபரங்களை அரசாட்சியாரின் 'கசற்' பத்திரிகையில் பார்த்துக்கொள்ளலாம். அல்லது பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்கு எழுதியறிந்துகொள்ளலாம்.

ஒப்பந்தக் கேள்விக் கடுதாசிகள்,

அடியிற் காணப்படும் வேலைகளைச் செய்கிறதற்காகிய ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் பிரதான சிவில் மெடிக்கலாபீசரால் 1916௵ வைகாசி௴ 9௳ மத்தியானம் பன்னிரண்டுமணிவரைக்கும் கொழும்பில் தமதாபீசிற் பெற்றுக்கொள்ளப்படும். இவ்வேலைகள் நடைபெறுவது, 1916௵ ஐப்பசி௴ 1௳ தொடக்கம், 1919௵ புரட்டாசி௴ 30௳ வரையுமுள்ள காலத்தில், ஒன்று, இரண்டு, அல்லது மூன்றுவருஷங்களுக்கு. இவைகளைப் பற்றிய மற்றும் விபரங்களை அரசாட்சியாரின் 'கசற்' பத்திரிகையில், அல்லது பிரதான சிவில்மெடிக்கலாபீசரிடம் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

1. அநுராசபுரத்திலிருந்து சாமான்கள் கொண்டுபோகுதல்.

2 கண்டி அரசாட்சியாரின் ஆசுபத்திரியிலிருந்து பிரேதங்களை அப்புறப்படுத்தி அடக்கம்பண்ணுதல்.

3 ஹெந்தலை குஷ்டரோகிகளின் ஆசுபத்திரிச் சமையல் வீட்டிற் கழிக்கப்பட்ட சாமான்களை வாங்குதல்.


புதிய கையொப்ப நேயர்கள்.

எமது பத்திரிகைக்குப் புதிய கையொப்ப நேயர்களாகச் சேர விரும்புவோர் ஒருவருடப் பத்திராக்கிரயத்தை முற்பணமாக அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். "இந்துசாதன" மானேசர்.

பத்திரக்கிரய வரவு.

| | ரு. ச. |
|---|---|
| ஸ்ரீ. ச. சுவாமிநாதக்குருக்கள், நீர்வேலி. | 2 00 |
| ,, மா. சதாசிவக்குருக்கள், சுருவில். | 4 50 |
| ,, சி. பரமசாமிக்குருக்கள், கொழும்பு. | 3-25 |
| ,, சி. பொன்னுச்சாமிக்குருக்கள், நல்லூர். | -75 |
| ,, V. கணபதிப்பிள்ளை, சுன்னாகம். | 2-00 |
| ,, ஆ. இராமலிங்கம், மடுல்கலை. | 6-50 |
| ,, V. இராமையா நாடார், கொழும்பு. | 3-25 |
| ,, N. சொக்கலிங்கம், உடப்பு. | 6-50 |
| ,, M. சுப்பிரமணியம், ,, | 6-50 |
| ,, அ. க. சின்னக்கதிராமன்பிள்ளை ,, | 6-50 |
| ,, A. S. தம்பையா, கொழும்பு. | 3-25 |
| ,, K. இராமலிங்கபிள்ளை, உடுப்பிட்டி. | 9-75 |
| ,, A. ஹோமர், கொழும்பு. | 8-00 |
| ,, ஐ. கதிர்காமத்தம்பி, திரிகோணமலை. | 6-50 |
| ,, R. A. K. சிங்கம், கேபடை. | 1-90 |
| ,, V. கதிர்காமு, சாவகச்சேரி. | 3-00 |
| பொலிஸ் வாசிகசாலை, குருநாக்கல். | 3-25 |
| சைவப்பிரகாச வித்தியாசாலை, எழாலை. | 1-00 |

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்:-நள ௵ சித்திரை௴ அஉ.

## நமது தேசாதிபதியவர்களின் வருகை.

நமது புதிய தேசாதிபதி ஸேர் ஜோன் அண்டேர்சனவர்கள் சென்ற சனிவாரத்தன்று கொழும்பில் வந்திறங்கினர். இவரிறங்கியபோது நீதிஅரசர்கள், இராணுவ உத்தியோகஸ்தர்கள், சட்டநிரூபண சபைப் பிரதிநிதிகள், பிரதான தலைமைக்காரர் ஆதிய பலதிறத்தினரவரையெதிர் சென்றழைத்து உபசரித்தனர். தேசாதிபதியவர்கள் சட்டநிரூபணசபை மண்டபத்தையடைந்தபோது சட்டநிரூபண சபையாராலும கொழும்பு நகரசங்கத்தாராலும், கொழும்பு வியாபாரசங்கத்தாராலும், மேல்நாட்டுத் தோட்டத்துரைமாரசங்கத்தாராலும், கீழ்நாட்டுத் தோட்டத்துரைமார் சங்கத்தாராலும், மேல்மாகாணத் தலைமைக்காரராலும உபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. இவ்வுபசாரபத்திரங்கள் எல்லாவற்றிற்கும வேறுவேறாக மறுமொழிகூறாது தேசாதிபதியவர்கள் எல்லாவற்றிறகும் ஒரே உபநியாசத்திலேயே மறுமொழி கூறினர்.

தேசாதிபதியவர்கள் தொடுவாய் இராச்சியப்பகுதித் தேசாதிபதியாகவும், கலனிகளின் மந்திரியாருக்குக்கீழ் ஓர் செக்கிறீற்றெறியாகவுமிருந்து அதிக அனுபவமடைந்திருக்கின்றார். இவ்விலங்காதீபத்தையும்முன் ஒருமுறைதரிசித்திருக்கிறார். இவரது பரிபாலனத்தின்கீழ் நமது தேசமதிக விருத்தியடையுமென்பதே நமது பெரும் நயபிக்கை.

## சுப்பிரமணியக் கடவுள்.—க.

"ஆதி யந்த மிலாதவெம் மண்ணலுக்
கோது பேரு முருவுமோர் செய்கையும்
யாது மிலலை யிவ்வாற்றினை யெண்ணிலா
வேதம் யாவும் விளம்புந் துணிபினால்."

"தன்னை நேரிலாப் பரம்பொரு டனியுருக் கொண்ட, தென்ன காரண மென்றியே லைந்தொழி லிபற்றி, முன்னை யாருயிர்ப் பாசங்கண் முழுவது மகற்றிப், பின்னை வீடுபே றருளுவா னினைந்தபே ரருளே."

ஊரும் பேரும் உருவும் செயலும் இல்லாத பரம்பொருள், ஊரும் பேரும் உருவும் செயலும் கொண்டருள்வது, அகண்டிதாகாரமாகிய தமது உண்மைச் சொருபத்தைக் கண்டிதமுற்ற சிற்றறிவுடையராகிய ஆன்மாக்கள் கண்டு கொண்டாடுவது கூடாமைபற்றியாம். ஆகவே, அப்பரம்பொருள் கொண்ட ஊரும் பேரும் உருவும் செயலுமாகிய திருவருள் விலாசங்கள் அனைத்தும் அவருடைய தடந்த வடிவெனப்படும். அவர் தமமுடைய அகண்டாகார சர்வவியாபக சுத்த சச்சிதானந்தமயமாகிய சொரூபவடிவத்தை எமக்குப் படிமுறையாக உணர்த்தி யருள வேண்டியே இத்தடத்த வடிவங்களை எல்லாம் கொண்டருள்வ ராகலின், இவை எல்லாம் அவருடைய திருவிளையாடல்கள் என்று எடுத்துப் பேசப்படும். அத்திருவிளையாடல்களுள் ஒன்றே எமது பெருமான் கொண்டருளிய சுப்பிரமணிய மூர்த்தமென்று வேத சிவாகம ஸ்மிருதி புராணங்களெல்லாம் எடுத்தோதும். இந்தச் சுப்பிரமணியமூர்த்தம் இக்கலிகாலத்துள்ளார்க்கு முற்பட்டருள்செய்யும் பிரதான மூர்த்தம் எனவும்படும். கிரேத, திரேத, துவாபர, கலி யுகங்களாகிய நான்கு யுகங்களினும், கடைக்கணிற்பதாகிய கலியுகத்திலே தருமநெறிகள் மிகச் சிலவன்றி இலவாதல்பற்றி, தருமநெறியிற் பெரிதுந் திறம்பிய இக்கலிகாலத்தார்மீதுந் தமதுகருணையைப்பாலிக்க வேண்டிப் பரமகருணாநிதியாகிய பெருமான் சுப்பிரமணிய வடிவுகொண்டருளினர். இந்தப் பெருமான் இக்கலிகாலத்தார்க்காக இங்ஙனம் எளிவந்துளார் என்பது, அவர் கலிகாலத்திலும அறிவின் மிகக்குறைந்த குறிஞ்சிநில மாக்களுக்குக் குலதெய்வமாக வெளிப்பட்டுநின்று திருவிளையாடல் செய்யுமாற்றால் இனிது துணியப்படும். அங்ஙனம் அவர் அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்யுமாற்றால் அவரை அறிவிற் குறைந்தாரது தெய்வம் என்பது ஒருசிறிதும் பெறப்படமாட்டாது.

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லனல்லனேல் மீக்கூறு மன்னனிலம்" என்னும் நாயனார் வாக்குக்கு இலக்கியமாக, அரசன் ஒருவன் அறிவிற்குறைந்த தனது பிரசைகளுக்குத் தான் இலகுவிற் காண்டற்குரியனாக வெளிப்பட்டுநின்று அவர்களுடைய குறைகளை நிறைவு செய்வானாயின், அவனை அறிவிலார்க்கரசன் என்று யாருஞ் சொல்லத் துணிவரா? நாகரிகத்திற் சிறந்த பிரசைகள் அறிவினும் ஏற்றமுடையராதலின், அவர்கள் தங் குறையைத் தாமாக முடித்தற்குரிய பக்குவமுடையராவர். அவர்கள் பொருட்டாக அரசன் அதிக சிரத்தை எடுக்க வேண்டியதில்லை. அறிவிற் குறைவுற்ற பிரசைகளுக்குத் தான் அண்மையிற் சார்ந்து அவர்களது குறைகளைய முடியாதாயின், அவர்கள் பெரிதுங் கஷ்டமுற்று வருந்துவராதலின், அவர்களுக்கு அணியனாய் நிற்பது அவனது செங்கோன் முறைக்கு இன்றியமையாது வேண்டப்படுவதோர் நெறியாகும். இந்தச் செங்கோன்முறைபற்றி அந்த வேந்தனை அநாகரிகர் வேந்தன் என்று சொல்வது தகுதியாகுமேயோ?

சுப்பிரமணியப் பெருமான் தமது பெருங் கருணைத் திறத்தால் அறிவிற் குறைந்த குறிஞ்சிநில மாக்களுக்கு வழிபடு கடவுளாக நின்று திருவிளையாடல் செய்வதனால், அப்பெருங்கருணைத் திறத்தை அவருடைய அடியார் எல்லாம் எடுத்தெடுத்துப் பாராட்டுவர். இங்ஙனம் பாராட்டுவதால் அவரை அநாகரிகர்க்குரிய கடவுள் என்று இக்காலத்துள்ள அறிவிலார் சிலர் பிதற்றுவாராயினர். இவர்கள் கடவுளது திருவருள் விலாசத்தின் சிறப்பைக் குறித்த அறிவு சிறிதேனும் தம்மிடத்தின்மைபற்றியே இங்ஙனம் எல்லாம் மருளுற்றறிவாராயினர்.

சுப்பிரமணியக் கடவுளது வணக்கம் நாகரிகமுடையாரிடத்துக் காணப்படுதலின்றி, அநாகரிகமாக்களிடத்து மாத்திரமே காணப்படுவதுண்டாயின், அவரை அந்த அநாகரிகரது கடவுள் என்று ஒருவாறு கூறினும் கூறலாம். ஆனால் அவரை நாகரிகமுடையார்தாமும் சிருட்டிகாலந்தொட்டே வந்தித்து வழிபாடுசெய்து வருகின்றார் என்பது வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் இதிகாசங்கள் முதலிய சகல வைதிக சைவசாத்திரங்களாலும், வலியுறுத்திச் சாதிக்கப்பட்டுக் கிடக்கும்போது, அவரை அநாகரிகரது கடவுள் என்று சற்றேனும் வாய்கூசாது சாதிக்கும் மிலேச்சமதத்தவர்க்கு நாம் சொல்லக் கிடப்பதென்?

சர்வலோகைக நாயகராகிய சிவபெருமானுடைய சத்திகள் ஆதிசத்தி பராசத்தி என்றும், இச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்தி என்றும், வீரசத்தி போகசத்தி ஐஸ்வரியசத்தி என்றும் பலவகைப்படும். இவற்றுள்ளே சுப்பிரமணிய மூர்த்தத்திலே பெரிது முகிழ்ப்புண்டு காணப்படுவன லௌகிகர்க்குப் பெரிது வேண்டப்படும் வீரசத்தி போகசத்தி ஐஸ்வரிய சத்திகளாம். இந்தச்சத்திகளை ஒட்டியே அவருடைய இச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்திகளும் விளங்கும். இந்தச் சத்திபேதங்கள் அனைத்தினும் வீரசத்தியே அவரிடத்து மேற்பட்டு விளங்குவது. இந்தச் சத்தியை உத்தியோகித்தே அவர் தேவர்களை இடுக்கண் செய்த அசுரரைச் சங்கரித்து, அத்தேவர்களைக் காத்தாராதலின், அந்தத் தேவரெலலாம் அவருடைய வீரசத்தியைப் புகழ்ந்து அவரை "அமரக் கடவுள்" என்று வேதங்கள் வாயிலாக எடுத்தேத்துவாராயினர். இந்த உண்மையை அறியாது அவரை ஓர் யுத்த வீரன் என இக்காலத்திற் பௌதிகாந்தகாரத்தாற் பிணிப்புண்ட மாமூகர்சிலர் மயங்குவாராயினர். "தீதிலாநன்மைத் திருவருட்குன்று"ஆகிய அப்பெருமான், தீமையை வாட்டி நன்மையைப்பரிபாலிக்கும் தமது திருவருணெறியை நாம் எல்லாம் அறிந்தீடேறுமாறு, நன்மையையே பெரிதோம்புந் தேவர்களுக்கெல்லாம் தாம் "தேவசேனாபதி"யாகின்று தீமையையே தொழிலாகவுடைய அசுரர்களைவாட்டி "அசுரகுலாந்தகன்" என்னுந் திருநாமத்தைப் பரித்துநின்றும, சிட்டபரிபாலனமும் துட்டநிக்கிரகமும் செய்த திருவருள்லீலையை நாம் ஒருசிறிது உற்றுணர்வதுண்டாயின், அவ்வுணர்ச்சி எம்மை எல்லாம் இந்தச் சன்மசாகரத்தில் நின்றெடுத்துக் கரையேற்றிவிடும் என்க.

## கத்தோலிக்க குதர்க்கம்.

(Communicated.)

கிறிஸ்துசமயத்தை எமது சைவசமயத்தோடு ஒப்பு நோக்குங்கால் அஃதோர் நேற்றைச்சமயம் என்பது சரித்திர ஆராய்ச்சியிற் றேர்ந்த பண்டிதர்கள் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதோர் உண்மையாகும். சைவ சமயம் உலகத்துக்கெல்லாம் மிகப் பூர்விகமானசமயம் என்பது மாத்திரமன்றி, அதனகத்தே ஆன்மதத்துவஞானத்துக்குரிய அநேகாநேக அந்தரங்கத்துறைகள் அமைந்துள்ளன என்பது மேலைத்தேசத்துச் சமயபரிசிலர்கள் தம்மாலும் ஒத்துக்கொள்ளப்பட்டுக் கிடக்கின்றது. கிறிஸ்துசமயம் மிகப்புதுவதாகியதோர்சமயம்என்பதுமாத்திரமல்லாமல், அதனகத்தே பொதிந்துள பொருள்களுள் யாதொரு அந்தரங்கார்த்தம் இல்லையென்பதும், அது எல்லோர்க்கும் வெளிப்படையாகிய பொருளையே எடுத்துப் போதிப்பது என்பதும் அந்தச் சமயத்தவர்கள் தாமே ஒத்துக்கொள்ளும் உண்மையாகும். இங்ஙனமாதலின் சைவ சமயத்தையும் கிறிஸ்து மதத்தையும் ஒரே உரைகல்லில் உரைத்துப் பார்ப்பது பெரும்பேதைமையாகும். கிறிஸ்துமதத்தை லௌகிகநூற் கல்விகொண்டு பரிசோதனை பண்ணுவதுபோலச் சைவசமயத்தைப் பரிசோதனை பண்ணுவது கூடாது. சைவசமயம் லௌகிக வரம்பினுக்கு அப்பாற்பட்டதோர்சமயம். சைவ சமயம் எல்லாச்சனங்களுக்கும் அவரவர் பக்குவத்துக்கியைந்தவாறு சமயசாதனைகளைக் கற்பிப்பதோர்சமயம். சைவசமய சாத்திரங்களிலே கூர்ந்த விவேகிகளது நுண்ணறிவுக்கும் எட்டாத பல ஆழ்ந்த கருத்துகளும், விவேகமற்றசனங்களுக்கு வேண்டப்படும் சாமானிய போதனைகளும், நாகரிகமற்ற வனசாருக்கு வேண்டப்படும் சமய அநுட்டானங்களும ஒப்பவே எடுத்துக் காட்டப்படும். ஆகவே அந்தச் சமயத்துக் குரிய கொள்கைகளுள் ஒன்று மற்றொன்றிலிருந்து உற்பத்தியாயிற்று என்று கொள்வது கூடாது. சைவர்களுடைய சகல சாத்திரங்களிலும் எல்லாப்படியி லுள்ளார்க்கும் வேண்டப்படும் துறைகள் அனைத்தும் விளக்கப்பட்டிருக்கும். இஃதொன்றே அதன் பழமையையும் அதன் தெய்வீக சம்பந்தத்தையும் இனிது விளக்கிக் காட்டும். கிறிஸ்துமதத்திலே இங்ஙனமானதொரு கிரமம் இல்லை. இப்படியொரு கிரமத்தை அநுசரித்தற்குத்தானும் அந்தச் சமயம் இடங்கொடாது. கிறிஸ்து சமயத்தின் வழி ஆன்மாக்களுள்ளே பக்குவபேதம் இருத்தற்குச் சிறிதாயினும் ஓர் ஏதுவில்லை. பக்குவபேதத்தின் வழியாக ஆன்மாக்கள் பலபேதப்பட்ட கதிகளை அடைவர் என்பதும் கிறிஸ்துமதத்துக்கு உடன்பாடல்ல. எல்லாச சனங்களையும் ஒப்பவே கவனித்து எல்லாச் சனங்களுக்கும் ஒரேவகையான மோட்சத்தையேகொடுத்தற்குக் காத்திருக்கும் கிறிஸ்துமதத்தில், பலதிறப்பட்ட போதனைகள் இருத்தற்குக் கிஞ்சித்தேனும் ஓர் நியாயம் இல்லை. ஆகவே அந்தச் சமயத்தில் உள்ள போதனைகளிலும் சாதனைகளிலும் பேதங் காணப்படுமிடத்து, அவைகள் காலந்தோறும் ஒன்றிலிருந்தொன்றாகவே காலவேறுபாடுபெற்றுப் பரிணமித்தமைந்தன என்பது நன்றாக நிறுத்தப்படும். படவே கிறிஸ்துமதம் லௌகிகப்படியிலுள்ளதோர்சமயம்என்பதும், என

வே, அதிலுள்ள போதனைகள் எல்லாம் லெளகிக பரிணாமமுறையாகவே காலந்தோறும் திரிபுற்று அமைந்தன என்பதும் நன்றாக காட்டப்படும். இந்த முறையை அநுசரித்துக் கிறிஸ்துமதத்தைப் பரீட்சித்தாரது பரீட்சைகளைக் கண்ட சில கிறிஸ்தவர், அந்த முறையைத் திவ்விய சமயமாகிய நமது சைவசமயத்தளவிலும் எடுத்தாள என்றுகிறார்கள். சைவசமயம் லெளகிக பரிணாமமரபுக்கு அமையாதென்பது அதனகத்து ஆதிதொட்டே பொதிந்து கிடக்கும் ஆழ்ந்த ஆன்மஞானத் துறைகளால் இனிது விளங்கும். சைவசமயத்தைப் பரீட்சிப்பதற்குப் பெளதிகசாஸ்திர வியுற்பத்தி மாத்திரம் போதாது. ஆன்மஞான வியுற்பத்தியும் அதன்பொருட்டு வேண்டப்படும். இந்த வியுற்பத்தி சிறிதும் இன்றி கிறிஸ்துமதத்தைப்போலவே சைவசமயத்தையும் மதித்துச் சில கத்தோலிக்கர் தாம் கற்ற லெளகிகநூற் கல்வியைப் பெரிதும் அபாவனை பண்ணுகிறார்கள்.

### விநாயக வடிவம்.

விநாயகவடிவத்தின் ஆழ்ந்த கருத்தும் அந்தரங்கார்த்தமும் சைவசமயசாத்திரங்களாகிய வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் இதிகாசங்கள் முதலிய சகலசாத்திரங்களிலும் எடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை ஒரு சற்றும் பொருட்படுத்தாது, யானை வணக்கமே விநாயகவணக்கமாகப் பரிணமித்ததென்று கத்தோலிக்கர் குதர்க்கம்பேசத் தலைப்பட்டிருப்பது "கொடிறும் பேதையும் கொண்டதுவிடா" என்னும் முதுமொழிக்கே இலக்கியமாகும். யானைவணக்கமே விநாயகவணக்கமாய் முற்றியது என்று தாபித்துவிட்டால், அது தமது சமயவிருத்திக்குப் பெரிதும் அநுகூலமாகும் என்பது கத்தோலிக்கரது கருத்தாக இருக்கலாம். ஆனால் அங்ஙனம் தாபித்தற்குத் தருக்கமரபுமன்றே இடங்கொடுத்தல் வேண்டும்? இவர்கள் இங்ஙனம் கொள்வதற்குரிய ஏது யாதாயினுமொன்றுளதா? இவ்வேதுச் சிறிதும் இல்லை என்பதும், இப்படி ஒரு ஏதுவைச் சைவசமயத்தளவில் சாதித்தல் கூடாதென்பதும் சைவசமயத்தை ஆராயுமளவில் யார்யார்க்கும் இனிது புலப்படுமென்பது பல நியாயங்கொண்டு "விநாயக வணக்கம்" என்னும் வியாசவாயிலாக இப்பத்திரிகையில் எழுதப்பட்டது. அந்த நியாயங்களுள் ஒன்றினையாவது எடுத்துக் கண்டித்தலின்றி "மாதாவறிய நான் பிடித்ததை விடமாட்டேன்" என்று பிடித்ததையே பிடித்துக்கொண்டுநின்றால், உண்மைக்கு அதனால் வரக்கடவதோர் ஊனம் சிறிதும் இல்லையாம். நியாயத்துறைகள் எல்லாம் ஒருபுறமாக, மிருகவணக்கமே விநாயகவணக்கம் ஆயிற்று என்று கத்தோலிக்கர் ஒருவர் பிராந்தி காரணமாக கனுக்கண்டாராம். இந்தக் கனவை நம்பியா நாம் உண்மையை நிச்சயிப்பது?

### சிவக் கோலை.

இந்தக் கத்தோலிக்கர் இங்ஙனமே சைவசமயிகளுக்குள்ளே சிவக் கொலை செய்யும்வழக்கும் ஆதிதொட்டிருந்துவந்தது என்கிறார். இவ்வழக்கு அவர்களிடத்தே நியதமாக இருந்ததில்லை என்று பல வேத ஆகம புராண காவிய வசனங்கள் கொண்டு இப்பத்திரிகையிற்றானே "சிவக் கொலை" என்னும் முகவுரையிட்டெழுதிய இரண்டு வியாசங்களின்மேல் காட்டித் தாபிக்கப்பட்டது. அந்த நியாயங்களிற்றானும் ஒன்றையாவது கண்டித்தலின்றி பிடித்ததையே பிடித்து, யோசேப்பு கண்ட கனவைப்போலத் தாமும் கண்ட கனவையே சாதிக்கப் பார்க்கிறார். அதுமட்டோ? முதன்மூன்றுயுகங்களிலும் சிவக்கொலை நியதவழக்காகச் சைவசமயிகளுள்ளே இருந்ததென்று நாம் ஒத்துக்கொள்வதாக இல்லது கூறவும் தலைப்பட்டுவிட்டார். பொய்த்துயில் கொள்வானைத் துயிலெழுப்புவது கூடாமைபோல, நியாயநெறிக்குச் சிறிதேனும் கட்டுப்படாமல் பிடித்ததையே பிடித்துக்கொண்டுநிற்கும் இந்தக் கத்தோலிக்கரோடு வாதிப்பதால் ஒரு சிறிதும் பயன் எய்தாதென்க.

## ச மா ச் சா ர ம்.

ஏசன்றாவர்கள்:—சுற்றோட்டத்தில் சென்றிருந்த வடமாகாண ஏசன்றர் மெஸ். றோறர்வ்பேர்க் அவர்கள் சென்ற 14உ யாழ்ப்பாணம் வந்தனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் கூட்டம்:—யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழையமாணவரின் வருஷாந்தக் கூட்டம் வருகிற சனிக்கிழமை டை கல்லூரிமட்டபத்தில் நடைபெறும்.

மேல்மாகாணக் கள்ளுக் குத்தகை:—மேல்மாகாணத்திலே சென்றவருடத்திலும் பார்க்க கள்ளுக் குத்தகை க,கூ0,கஅக ரூபா மேலதிகமாக விலைப்பட்டிருக்கின்றது.

டக்தர் K. V. முத்துக்குமாரு அவர்கள்.—சென்ற அக்டோபர்மீ இங்கிலாந்து சென்றிருந்த டக்தர் K. V. முத்துக்குமாரு அவர்கள் லண்டன் எம். ஆர். சி. எஸ்., எல். ஆர். சி. பீ., என்னும் வைத்திய சோதனையிற் சித்திபெற்றிருக்கின்றனர். இவர் யாழ்ப்பாணம் மணியகாரன் ஸ்ரீ. V. M. முத்துக்குமாரு அவர்களின் சகோதரன்.

இலங்கையிலுள்ள நோத்தாரிசுமார்:—இலங்கையிலுள்ள நொத்தாரிஸ்மாரின் தொகை ருஎகூ. இவர்களுள் பிறக்டர் நொத்தாரிஸ்மார் உட்பட கஉக பேர் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கிலும் கூ பேர் மன்னாரிலும் கூ பேர் முல்லைத்தீவிலும் ௨0 பேர் மட்டக்களப்பிலும் ௭ பேர் திரிகோணமலையிலும் வேலைபார்க்கின்றனர்.

யாழ்ப்பாணம் அரசாட்சியார் வைத்தியசாலை:—யாழ்ப்பாணம் அரசாட்சியார் வைத்தியசாலையில் வைத்தியஞ் செய்விப்போர் தங்கள் செலவில் தங்கி நின்று வைத்தியஞ் செய்விப்பதற்கு விடுதிச்சாலைகள் விரைவில் அமைக்கப்படுமென வடமாகாண அரசாட்சி வைத்தியரறிவித்திருக்கின்றனர்.

சைவப் பிரசங்கம்:—வருகிற சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணி வரையும் மானிப்பாய் இந்துக்கல்லூரிமண்டபத்தில் வித்துவான் ஸ்ரீமத். சி. தாமோதரம்பிள்ளை அவர்கள் மறுபிறப்புண்மையைக் குறித்து ஓர் பிரசங்கஞ் செய்வார். அப்போது ஸ்ரீமத். ச. சபாரத்தின முதலியார் அவர்கள் அக்கிராசனம் வகிப்பார். மறுபிறப்புண்மையை ஆக்ஷேபிப்போருளரேல் அவர் அன்று அங்குச் செல்லின் அவரது ஆக்ஷேபங்களுக்குத் தக்க சமாதானங் கூறப்படும்.

திருவாங்கூரில் புகையிலைச் செய்கை:—திருவாங்கூர்சட்டநிருபணசபையிலேயொருவர் திருவாங்கூரில் அரசாட்சியார் புகையிலைச் செய்கை நடத்துவிக்கவேண்டுமெனப் பேசினர். இதைப் பற்றி எழுதிய ஓர் திருவாங்கூர்ப் பத்திராசிரியர் யாழ்ப்பாணம் மாதிரியாகப் புகையிலை திருவாங்கூரில் செய்கைபண்ணி யாழ்ப்பாணம் புகையிலை திருவாங்கூருக்கு ஏற்றுமதியாகாதபடி செய்யவேண்டுமென வெழுதுகின்றனர்.

வல்லிபுரநாதர் கோயிலில் தீப்பற்றியது:—துன்னாலையிலுள்ள வல்லிபுரநாதர் கோயிலில் தீப்பற்றிக் கிடுகால் வேயப்பட்டிருந்த கொட்டகைகளும் அதன்கீழிருந்த வாகனங்களுமெரிந்துபோயின. இத்தீயெப்படியுண்டாயிற்றென்பது தெரியவில்லையாம்.

முதலியார் மெஸ். பிறன்சிஸ் அவர்கள்.—யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோர்த்தலைவராயிருந்து கொழும்புக்கு மாற்றப்பட்ட முதலியார் மெஸ் பிறன்சிஸ் அவர்களுக்கு நொத்தாரிஸ்மாரும் வேறு பல உத்தியோகஸ்தரும் சேர்ந்து சென்ற சனிக்கிழமை ஓர்பெரும் உபசாரனை செய்தனர்.

கோலை:—சில தினங்கட்கு முன்னர் காரைதீவு மேற்குப் பொலிஸ் விதானையின் மகன் ஓர் தச்சனை விருந்திற் பிடிக்கும்படி சென்றபோது அவன் அவரை உளியாற் குத்திக் கொன்றனன். கொலையுண்டவரின் வயசு 23 வரையிலிருக்குமாம். பரிதாபம்! பரிதாபம்!!

குருநாக்கலில்ஆலாங்கட்டிமழை:—குருநாக்கலிலசும் தேதிகாத்தமும்முரமாய் வீசிமழைபெய்தபோது இடைக்கிடை பெரும்ஆலாங்கட்டிகள் விழுந்தனவாம்.

நியாயதுரந்தரப் பரீக்ஷையில் தேறிய வங்காளப்பெண்:—கல்குத்தா பீ. எல் பரீக்ஷையில் தேறிய ஓர் வங்காளப் பெண் கோடுகளில்நியாயமுந்தரிக்கத் தனக்கு உத்தரவு கொடுக்கும்படி கேட்டிருக்கிறாள்.

உபாத்தியாயர்களும் மதுவிலக்குச் சங்கங்களும்:—கௌரவ ஸ்ரீ. பாலசிங்கமவர்கள் சட்டநிருபணசபையிலே உபாத்தியாயர்கள் மதுவிலக்குச சங்கங்களில் சேர்தல் சட்ட விரோதமான செய்கையாகுமோவென வினவியபோது அரசாட்சியார் நேரான மறுமொழி சொல்லவில்லை. இதைப்பற்றிச் ஸ்ரீ.பாலசிங்கமவர்கள் மௌனமாயிருந்துவிடாது தேசாதிபதியவர்களுக்கு ஓர் கடிதமெழுதியிருந்தார். தேசாதிபதியவர்கள் அவரது கடிதத்துக்கு மறுமொழியாக உபாத்தியாயர்கள் ஊரவர்கள் கள்ளுச்சேர்ப்பதற்கு மரங்களைக் கொடாதபடி நியாயஞ்சொல்லித்தடுக்கலாமென்றும், ஆனால் வலாற்காரஞ்செய்து அல்லது பயமுறுத்தித் தடைசெய்தல் குற்றமாகுமென்றும், உபாத்தியாயர்கள் மதுவிலக்குச் சங்கங்களில் சேரலாமென்றும், ஆனால் அரசாட்சியாருக்கு விரோதமான நோக்கத்துடன் நடத்தப்படும் சங்கங்களில் சேர்தல் குற்றமாகுமென்றும் தெரிவித்திருக்கின்றனர்.

உபதேச மகாவித்தியாசாலை:—இந்துசமயத்தைப் போதிக்கவும் உபந்நியாசிக்கவும் தேசிகர்களைப்பயிற்றுதற்குக் காசிமாநகரிலேமுகவுரைப் பெயருடன் ஓர்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இதிலே போதகர்களாகவும், உபந்நியாசகர்களாகவும் வரவிரும்புவோர் மாத்திரமன்றி இந்துசமயத்தைகற்கவிரும்பும்சகலரும்மாணவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இக்கல்லூரியிலே சிமிர்திபுராணம்வேதம் சங்கீதம்வியாகரணம்முதலியனவும் பொது அறிவுக்கேற்றபலசாஸ்திரங்களும் கற்பிக்கப்படுகின்றன உபந்நியாசகர்கள் வகுப்பில்இப்போது ௪௨ வித்தியார்த்திகள் கற்கின்றனர். கீழ் வகுப்பில் கூ0 பேர் கற்கின்றனர். இக்கல்லூரி வரவர வளர்ந்து இதிலகற்கும்மாணவர்மூலமாக நமது சமயமதிக விர்த்தியடையுமென நினைக்கின்றோம்.

கதாப் பிரசங்கம்:—திரிகோணமலை சைவவித்தியாசாலையில் பங்குனிமீ ௨௯உ (8-4-16) சனிக்கிழமை இரவு பிரமஸ்ரீ. இ. கு பூர்ணானந்தேஸ்வரக் குருக்களவர்களால் காளிதாச சரித்திரம் பிற்பாகம் போசராசன் பிறப்பு, அரசியல், வித்வக் கோஷ்டி, காளிதாசர் வருகை, அவர் பாடிய விசித்ர சுலோகங்கள், செய்த அற்புதங்கள் முதலியன) பல பிரமாணங்களோடு விஸ்தாரமாகப் பிரசங்கிக்கப்பட்டது. சபையிலிருந்த பலர் குருக்களவர்களுடைய வசனசாதுரியத்தையும் சரித்திரரசனையையும் கேட்டு மகிழ்ந்தனர். பிரசங்கமுடிவில் மிஷன் இங்கிலிஷ்ஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீ. ஆ. மயில்வாகனம்பிள்ளையும். சைவாங்கில வித்தியாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ. வி வேலாயுதம்பிள்ளையும் குறிப்புரைகூறவும். சைவதிராவிட வித்தியாசாலை உபாத்தியாயா ஸ்ரீ. வா. தம்பையாபிள்ளை சாற்றுகவி கூறவும் தேவாரபாராயணத்தோடு சபை பூர்த்தியாயிற்று. கடித.

ஆயுர்வேத கல்லூரி:—டெல்கிமாநகரிலே கட்டப்பட விருக்கும் ஆயுர்வேத கல்லூரிக்கு இந்தியபிரதிகாவலராயிருந்துஇப்போது இளைப்பாறிச் சீமை சென்றலார்ட் ஹார்டிஞ் அவர்களாற் சென்றமீ ௨௨உ அஸ்திவாரக்கல இடப்பட்டது. இக்கல்லூரிக்கு இப்போது இரண்டிலக்ஷம் ரூபா வரையிற் சேர்ந்திருக்கின்றது. இதிலே ஆடவர்களும் பெண்களும் மேலைத்தேச சத்திரவைத்தியமும கீழைத்தேச ஆயுர்வேதம் அதாவது சுதேச வைத்தியமும் கற்பிக்கப்படுவார்கள். இக்கல்லூரியைப்பற்றி லார்ட் ஹார்டிஞ் அவர்கள் பேசியபோது மேலைத்தேச வைத்தியம் இன்னும் பூரணநிலைக்கு வரவில்லையென்றும், பேதி பிளேக் மலேறியா முதலியநோய்களுக்கு மேலைத்தேசவைத்தியர் மாறிமாறிவிதிக்கும் ஔஷதங்களே இதற்குச்சான்றென்றும், மேலைத்தேச வைத்தியர்கள் கீழைத்தேச வைத்தியத்திற் கூறப்பட்டுள்ள அரிய ஔஷதங்கள்சிலவற்றைத் தங்கள் வைத்திய நூல்களில் இப்போது சேர்த்திருக்கின்றார்களென்றும் மேலைத்தேச வைத்தியத்தைப் பெறக்கூடியதாயிருக்கு மிடங்களிலும் அநேகர் சுதேசவைத்தியத்தையே விரும்புகிறார்களென்றும் ஆகையால் இந்த ஆயுர்வேதத்தை நன்னிலைக்குக் கொண்டுவருவது நன்றேயென்றுங் கூறினர்.

## சிதம்பரம் ஞானப்பிரகாச திருக்குளம்.

இத்திருக்குளப் படித்துறைத் திருப்பணித் தருமத்துக்குப் பொருள் உபகரித்தோர் பெயருந் தொகையும்:—

(38-ம் இலக்கப் பத்திரிகைத் தொடர்.)

இந்துசாதன மானேசர் மூலமாக வரவு.

| ஸ்ரீ. | | ரு. ச. |
|---|---|---|
| அ. சபாபதிப்பிள்ளை | இ. சா. ஆபீஸ். | 10-00 |
| சி கந்தையாபிள்ளை | ,, | 5-00 |
| ச. சிவகுருநாதபிள்ளை | ,, | 5-00 |
| பெ. கார்த்திகேசபிள்ளை | ,, | 5-00 |
| சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டியார் | | 8-00 |
| ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை | | 5-00 |
| சு. இராமலிங்கம் | ,, | 1-00 |
| சி. செல்லையா | ,, | 1-00 |
| வே. ஓயாச்சாமி | ,, | 1-00 |
| சி. மயில்வாகனம் | ,, | 1-00 |
| செ. பொன்னம்பலம் | ,, | 1-00 |
| மு. சின்னத்துரை | ,, | 1-00 |
| கா. செல்லப்பா | ,, | 1-00 |
| வே. கந்தையா | ,, | 1-00 |
| அ. சின்னப்பா | ,, | 1-00 |
| கா. சுப்பிரமணியம் | ,, | 1-00 |
| ம. சின்னத்தம்பி | ,, | 1-00 |
| இ. வேலுப்பிள்ளை | வண்-கிழக்கு | 2-00 |
| கா. இராமுப்பிள்ளை, | பெரியகடைத்தெரு | 3-00 |
| ஆ. கணபதிப்பிள்ளை | ,, | 2-50 |
| ராம. வீ. அ. மு. ராமசாமிச்செட்டியார் | | 2-00 |
| சு. முருகேச | ,, | 1-50 |
| அ. வேலுப்பிள்ளை | ,, | 1-00 |
| இ. முருகேசு | ,, | 1-00 |
| பே. அப்பாபிள்ளை | ,, | 1-00 |
| க. வைரமுத்து | ,, | 1-00 |
| வி. துரையப்பா | ,, | 1-00 |
| அ. வேலுப்பிள்ளை | அராலி | 1-00 |
| க. தில்லையர் | தாவடி | 1-00 |
| சி. துரைச்சாமி | ,, | 1-00 |
| கா. சரவணமுத்து | ,, | 1-00 |
| க. வேலுப்பிள்ளை | மூளாய் | 1-00 |
| | | 70-00 |
| ஸ்ரீமதி. | | |
| த. இராசம்மா | நங்கைலை | 10-00 |
| ஸ்ரீ. க. வேலுப்பிள்ளை | சுழிபுரம் (இரண்டாமுறை) | 1-60 |
| வெள்ளையன் கங்காணி | டியார்மூலமாய் | 3-75 |
| அக்கினிசாமி | ,, | 4-65 |
| மா. சண்முகம்பிள்ளை | வண்ணை (முதல்முறை) | 10-00 |
| வை. வெற்றிவேலு | சிறம்பான் | 1-50 |
| | ஆக: | 101-50 |
| | முன் வெளிப்படுத்திய தொகை: | 593-87 |
| | ஆகத் தொகை: | 695-37 |

இங்ஙனம்,

இராக்ஷசஹு } பங்குனிமீ }

ச. பொன்னம்பலவன்,
சைவப்பிரகாச வித்தியாசாலை
சிதம்பரம்.

## தந்திச் சமாச்சாரம்.

### (யுத்தசங்கதிகள்)

#### ஏப்பிரல்மூ 11உ.

வேர்டூனில் ஜர்மனியர் கடும்யுத்தம் செய்கின்றனர். அவர்கள் அக்கினித்திராவகங்கொண்டு அமர் புரிகின்றனர். பிரான்சியருக்குரிய அகழ்களின் சில பாகங்களைப்பிடித்தனர். மியூசுக்குக்கிழக்கே பிரான்சியர் பிடித்த அகழ்களினின்றும் அவர்களைத் துரத்துவதற்கு ஜர்மனியர் முயன்றனர் ஆனால் இதில் அவர்கள் அதிகம் அநுகூலமுறவில்லை. டோமொன் றப்பகுதியில் ஜர்மனியர் கடும்யுத்தம் புரிகின்றனர். உவோவரிலும் கடும்யுத்தம் நடக்கின்றது. ஒரு ஜர்மனிய ஆகாயரதம் பான்டொன் வில்லவந் என்னுமிடத்திற் பிடிக்கப்பட்டது. அதிலிருந்த இரு ஆகாய கமனிகளும் கொலைப்பட்டனா.

'மார்க்கம் அபே' என்னும் ஆங்கில கப்பலும், "சன்ரன்டிதிரே" வென்னும் ஜப்பானிய கப்பலும், "கலிடோனியா" வென்னும் டானிஷ் கப்பலும் நீரில் அமிழ்த்தப்பட்டன. சன்ரன் டிதிரேவிலிருந்த 4 பேர் மாண்டனர். அன்சொன் என்னும் இத்தலிய கப்பலும் நீரில் அமிழ்த்தப்பட்டது அதிலிருந்தோர் ஓர் பிரான்சிய டிஸ்றோயர்கப்பல் மூலமாக மீட்கப்பட்டனர். எலாஸ்ரன் என்னும் ஆங்கில கப்பலும் யூனியன் என்னும் இத்தலிய கப்பலும் கடலுள் அமிழ்த்தப்பட்டன. எலாஸ்ரன் என்னும் கப்பலிலிருந்தோர் மீட்கப்பட்டனர். மற்றக்கப்பலிலுள்ளோரும் மீட்கப்பட்டனா. சிமெற்றொன் என்னும் ஆங்கில கப்பலும் ஆழிவாய்ப்படுத்தப்பட்டது.

பகைவருக்குச் சகாயமான ஓர் ஒற்றவன் இன்று லண்டன் நகரிற் சுட்டுக் கொல்லப்பட்டான்.

#### ஏப்பிரல்மூ 12உ.

ஜர்மனியர் இப்பொழுதும் பிரதிகூலமாக வேர்டூனில் யுத்தஞ் செய்கின்றனர். ஜர்மனியர் "டெற்மன்" என்னுமிடத்துக்கணித்தாக அக்கினித்திராவகத்தைப் பிரயோகித்து யுத்தஞ் செய்தவிடத்தும் பிரான்சியராற் துரத்துண்டனர். டோர்மன் வோகஸ் என்னுமிடங்கட்கிடையே நேற்றுப்பெரும் யுத்தம் நடந்தது இதில் ஜர்மனியருக்கு அதிகசேதமுண்டென எண்ணப்படுகின்றது.

யூனியன் என்னும்கப்பலிலிருந்தோர் 19 பேர் கரையில் மீட்கப்பட்டனர்.

சுகான்மலைப் பள்ளத்தில் அவுஸ்திரியர் கடுங்குண்டுப்பிரயோகஞ் செய்தபோது இத்தலியர் பிரதிகுண்டுப்பிரயோகத்தால் அவர்களைத்தோல்வியுறச் செய்தனா. ஐசோனுவில் அதிகம் குண்டுப் பிரயோகம் நிகழ்ந்தது.

#### ஏப்ரல்மூ 13உ

இம்பதேற்யுர் என்னும் ருசிய கப்பல் ஆழிவாயப்பட்டது 9 பேர் தப்பினர். சிலர் காயமுற்றனர் பலர் மாண்டனர்.

றபேர்ட்அன்டேர்சன் அன்கஸ் என்னும் இரு ஆங்கிலகப்பல்கள் ஆழிவாய்ப்பட்டன. ந்ர்விக, இன்வேர்லொன் என்னும் இரு ஆங்கிலக் கப்பலும் டொரோதியா வென்னும் டேனிஷ் கப்பலும் ஆழிவாய்ப் படுத்தப் பட்டன. கொலம்பியா வென்னும் கப்பல் முன்னர்க் கூறியவாறு ஒல்லாந்தகப்பலன்றென்றும் அது நோடானிஷ் கப்பலென்றாக தெரிவிக்கப் படுகின்றது.

#### ஏப்பிரல் மூ 14உ

வேய்க்காவென்னும் பிரான்சிய கப்பல் கடலில் அமுக்கப்பட்டது. அதிலிருந்தோர் 30பேர் தப்பினர்.

3000 தொன்கொண்ட 'சிக்'என்னும் ஆங்கில கப்பல் ஆழிவாய்ப்படுத்தப்பட்டது.

சிற்றாசியாவிலுள்ள துருக்கியர் தாம் முன்னர் பறிகொடுத்த இடங்களைத் திருப்பிப் பிடிக்கும் நோக்கமாக அக்கினித்திராவகத்தைப் பிரயோகித்து அமர்புரிந்தும் சற்றில் சுபசெயமடைந்தனர்.

## க டி த ம்.

### ஐ க் கி ய ம்.

(அச்சுவேலி "அறிவு அபிவிருத்திச்சங்கத்"தில் ஸ்ரீ. ம. வே. மகாலிங்கசிவம் அவர்கள்செய்த உபந்நியாசம்.)

கனந்தங்கிய பிரபுக்களே, மாணாக்கர்களே, இந்த மகாசபையில் உங்களுடைய சீர்திருத்தத்திற்கு வேண்டிய விஷயங்களை யெடுத்துப் போதித்து நல்வழி காட்டவல்ல அறிவாளிகள் இவ்வூரிலேதான் பிறவிடங்களிலேதான் நூற்றுக்கணக்காக இருக்கவும் அப்படிப்பட்ட அறிவாளிகளின் பரிசுத்தமான பாதங்களைத்தானும் தொடுவதற்கும் தகுதியில்லாத என்னை யழைத்துப் பிரசங்கஞ் செய்யும்படி கனப்படுத்திய உங்கள் அன்பிற்கு மனசார வந்தனஞ் செய்கின்றேன். கனவான்களே, இவ்வூரவர்கள் அஞ்ஞான மென்னும் இருளினால் மூடப்பட்டிருப்பார்களானால் அவ் அஞ்ஞானத்தை நீக்கவும் அதற்கு ஞானமாகிய வெளிச்சத்தைக் கொடுக்கவும் நான் ஆகாயத்திலிருந்து வந்த தேவதூதனல்ல. நான் நீங்களறியாத தொன்றையும் சொல்லவரவுமில்லை, சொல்லுஞ் சக்தியுமில்லை. நம்மில் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு தாய் இருப்பினும் எங்கள் எல்லாருக்கும் நாம் பிறந்த நாடாகிய யாழ்ப்பாணமே பொதுவாகிய உத்தம மாதா என்றும், தாய்க்குச் சற்புத்திரர்கள் செய்ய வேண்டிய கடமைகளெல்லாம் நாம் எல்லாரும் நமது தாய்த்தேசத்துக்குச் செய்யவேண்டும் என்றும், நானும் அவ்விஷயத்தில் உங்களுக்கு சகாயஞ் செய்யக்கூடு மென்றும் சொல்லும்படியே இங்கு வந்து நிற்கின்றேன்.

உங்கள் 'அறிவு அபிவிருத்திச் சபை' நிர்வாக அங்கத்தவர்கள் என்னைப் பேசும்படி கேட்டுக்கொண்ட விஷயம் ஐக்கியம். ஆதலால் ஐக்கியம் என்பது என்னை? ஐக்கியம் ஏன் வேண்டும்? ஐக்கியம் ஜனங்களுக்கிடையில் இல்லாமற் போவது ஏன்? ஜனங்களுக்கிடையில ஐக்கியம் உண்டாகும் வழிவகைகளென்னை? எந்த எந்தக்காரியங்களில் ஜனங்களுக்கு ஐக்கியம் வேண்டும்? என்னுங் கேள்விகளை வினாவிப் பேசுவது என் கடமையாகின்றது.

உங்கள் குடும்பம் ஒவ்வொன்றிலும் ஐக்கியம் அதாவது ஒற்றுமையினாலேயே ஒவ்வொரு காரியமும் நடைபெறுவதைக் காணுகின்ற உங்களுக்கு ஐக்கியம் இன்னதென்று விளக்கப்புகுவது ஒரு வித்துவானுக்கு அரிவரி படிப்பிக்க நினைப்பதைப்போலும். மனிதர்கள் எல்லாம் ஐக்கியத்திலே பிறந்து ஐக்கியத்திலே வளர்ந்து ஐக்கியத்திலே சீவித்து ஐக்கியத்திலே மரிக்கின்றவர்களாய் இருக்கின்றார்கள். நமதுவாழ்க்கைக்கு ஐக்கியமே வித்தாய்இருக்கின்றது. ஐக்கியவிவாகத்தில் முளைத்த நமது ஜீவியமாகிய பயிரைப் பின்னும் ஐக்கியமே மழைபோல நின்று வளர்க்கின்றது. நமது தொடக்கமும் ஐக்கியம், முடிவும் ஐக்கியமென்றே திருப்பியும் சொல்லுகின்றேன்,

ஏனென்றால் நமது வாழ்க்கை தந்தைதாயினுடைய ஐக்கியத்தினுண்டாகிப் பகவானுடைய பாதங்களில் ஐக்கியமாவதுடன் முடிகின்றது.

ஐக்கியத்தினுண்டாகும் நன்மையை உங்கள் குடும்பங்களிலே கவனித்துப் பாருங்கள். ஒரு குடும்பத்தில் ஒருஆணும் அவனுடைய தாய்தந்தையரும் அவனுடைய மனைவியும் இருக்கின்றார்களென்று வைத்துக்கொள்வோம். அவர்களெல்லாம் சற்குணமுள்ளவர்களாய் ஒருவரில் ஒருவர் விசுவாசமும் அன்பும் உள்ளவர்களாய் ஐக்கியப்பட்டிருக்கும்பொழுது அக்குடும்பம் எவ்வளவு சந்தோஷமாய் இருக்கின்றது. அக்குடும்பம் பார்க்கிறவர்களுக்கு எவ்வளவு மதிப்பை உண்டாக்குகின்றது. புருஷன் குடும்பநன்மையைக் குறித்துச் சொல்லுஞ்சொல்லைக்கேட்டு மனைவி கீழ்ப்படிந்து நடக்கின்றாள். கபடமற்ற பரிசுத்தமான மனமுள்ள மனைவியின் இன்பமானசொற்களைக் கேட்டுப் புருஷன் மகிழ்கின்றான். வயசுபோன தாயும் தகப்பனும் தங்கள் உண்மையுள்ள குமாரனுடைய சந்தோஷமான பொருட்செலவினாலும் விசுவாசமுள்ள மருமகளின் அன்பான பராபரிப்பினாலும் மனஆறுதலடைந்திருக்கின்றார்கள். இந்தக் குடும்பத்தில் ஐக்கியக்குறைவு உண்டாகிவிட்டாலோ காரியங்களெல்லாந் தலைகீழாய்க் கவிழ்கின்றன. அன்பும் ஆறுதலுமிருந்த அவர்களுடைய இருதயத்தில் விரோதமும் மனக்கொதிப்பும் அடைகின்றன. தேன்போல இனிமையாகப் பேசிய அவர்கள் நாக்குகள் எல்லாம் விஷம்போல வெடுவெடுப்பான சொற்களைப் பேசத் தொடங்குகின்றன. குளிர்ந்த செந்தாமரைப் புஷ்பம்போல மலர்ந்திருந்த அவர்களுடைய முகங்கள் எரிந்து கரிந்த குறைக்கொள்ளியின் நிரம்பிய சுடலைபோலச் சுட்டுக்கொண்டிருக்கின்றன. புருஷனோ தன் மனைவியில் நம்பிக்கையற்றுப் பொருளை வரையறவு செய்யப்பார்க்கிறான். மனைவியும்புருஷன் ஒருவேளை தன்னைக் கைவிட்டுவிடுவானோ என்று பயந்து கள்ளத்தேட்டம் தேடப்பார்க்கின்றாள் இப்படியாக ஐக்கியமுள்ள குடும்பத்திற்கும் ஐக்கியமில்லாத குடும்பத்திற்கும் எவ்வளவு வித்தியாசமென்று பார்த்தீர்களா? உங்கள் குடும்பங்கள் பெரும்பாலும் ஐக்கியமாக இருந்தாலும் சில காலங்களில் ஐக்கியக்குறைவு நேரவில்லையா? அதனால் உங்களுக்குக் கலக்கமுண்டாகவில்லையா? சற்றே நினைத்துப் பாருங்கள்.

குடும்பங்களில் ஐக்கியம் உண்டாவதற்கும் இல்லாமற்போவதற்கும் காரணமென்ன? இதை ஒரு குடும்பத்திலுள்ள புருஷன் மனைவியில் உற்று நோக்கலாம். ஒருகணவனிடத்தில் என்ன என்ன சற்குணங்கள் இருக்கவேண்டுமோ ஒரு மனைவியிடத்தில் என்ன என்ன குண விசேஷங்கள் இருக்கவேண்டுமோ அக்குணங்கள் அவர்களிடத்தில் இருக்கும்வரையில் அவர்களுக்கிடையில் ஐக்கியம் உண்டாகின்றது. அந்தக்குணங்கள் அவர்களிடத்தில் இல்லாமற்போகும்பொழுது ஐக்கியமும் இல்லாமற்போகின்றது. கணவன் குடித்து வெறித்து விபசாரஞ்செய்து வீட்டுப் பொருட்களைப் பாழாக்கித் துன்மார்க்கனாய்த் திரிவானேயானால் அவன் மனைவியுடன் ஐக்கியமாக இருப்பது எப்படி? மனைவி அவனுடன் ஐக்கியமாக இருப்பது எப்படி? இனி மனைவி புருஷனுக்கு அடங்காதவளாய்த் தன்னிஷ்டப்படி நடந்து துன்மார்க்கங்களிற்பிரவேசித்தால் அவள் கணவனுடன் ஐக்கியமாக வாழ்வது எப்படி? கணவன் அவளுடன் ஐக்கியமாக வாழ்வது எப்படி? சபையார்களே, ஐக்கியத்தைக் குடும்பத்தில் வைத்து அதாவது குடும்ப ஐக்கியத்தைப்பற்றிப் பேசியது எதற்காக என்று நினைக்கிறீர்கள்? உங்கள் குடும்பங்களில் ஐக்கியம் இருக்கவேண்டும் என்பதற்காகப் பேசினேனென்று நினைக்கின்றீர்களா? நீங்கள் எதைக் குடும்பமென்று நினைக்கிறீர்களோ அக்குடும்பத்தின் ஐக்கியத்தைப்பற்றியும் ஐக்கியக் குறைவைப்பற்றியும் பேசவேண்டிய அவசரம் எனக்கு இல்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குடும்பத்திற்காகவே சீவியகாலம் முழுவதும் பாடுபடுகின்றார்களாகையால் அவர்கள் தங்கள் குடும்பகாரியங்களைச் சீர்ப்படுத்தி நடக்க வகையறிவார்கள். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

சபையார்களே, நான் இப்பொழுது ஒரு புதுக் குடும்பத்தைப்பற்றிப்பேசுகின்றேன். அது மிகப் பழைய குடும்பமாயிருந்தாலும் அந்தப் பெரிய குடும்பத்தில் நீங்கள் எல்லாருஞ் சேர்ந்து ஒரு பகுதியாயிருந்தாலும் அந்தக் குடும்பத்தைப்பற்றி உங்களுக்கு ஞாபகமிருக்கின்றதாக எனக்குத் தோன்றாதபடியால் அதைப் புதிய குடும்பம் என்றே சொல்லவேண்டியிருக்கிறது. நான் சொல்லும் புதிய குடும்பம் உங்கள் சொந்த ஊராகிய தாயும் அந்த ஊர்ச் சனங்களாகிய பிள்ளைகளுமே. உங்கள் சிறிய குடும்பத்தில் எப்படித் தாயும் பிள்ளைகளும் இருக்கின்றார்களோ அப்படியே இந்தப் பெரிய குடும்பத்தில் உங்கள் ஜென்மதேசமே அதாவது நீங்கள் பிறந்த ஊரே தாயாகவும் அந்தஊரவர்களாகிய நீங்களெல்லாரும்சகோதரர்களாகவும் இருக்கின்றீர்கள். உங்கள் ஊரவர்கள் சிலர் பிராமணர்களாயிருக்கலாம், சிலர் உழவர் பள்ளர்களாயிருக்கலாம், சிலர் பெரிய பிரபுக்களாயிருக்கலாம், சிலர் பரம ஏழைகளாயிருக்கலாம், சிலர் கல்விமான்களாயிருக்கலாம். சிலர் மூடர்களாயிருக்கலாம். சிலர் ஈசுவரபக்தியுள்ளவர்களாயிருக்கலாம், சிலர் ஈசுவர துரோகிகளாயிருக்கலாம், சிலர் சன்மார்க்கர்களாயிருக்கலாம், சிலர் துன்மார்க்கர்களாயிருக்கலாம், சிலர் சைவர்களாயிருக்கலாம், சிலர் கிறிஸ்தவர்களாயிருக்கலாம், ஆனுற் காரியமில்லை எல்லாருஞ் சகோதரர்களே. நீங்களெல்லாம் உங்கள்ஊராகிய ஒரு தாயினிடத்திற் பிறந்து தாயின் முலைப்பாலைக் குடிப்பதுபோல உங்கள் தாயூரினுண்டாகிய நெல்லுமுதலாகிய பிரயோசனங்களைச் சாப்பிட்டு வளர்ந்தபடியால் உங்கள் நிலைபரத்தில் என்ன உயர்வுதாழ்வு இருந்தாலும் உங்களுக்குள் என்ன விரோதமிருந்தாலும் நீங்களெல்லாம் சகோதரர்களே. அப்படி நான் சொல்வதற்காக நீங்கள் மனஸ்தாபப்படவேண்டாம், நீங்கள் கூச்சப்படவேண்டாம், நீங்கள் எல்லாம் சகோதரர்களே. உங்கள் தாயூர் அல்லது தேசமாதா உங்கள் எல்லாரையும் என்குழந்தைகளே என்செல்வங்களே என்று அழைக்கின்றாள். கடவுளும் உங்கள் எல்லாரையும் உயர்வு தாழ்வு என்ற பேதமின்றித் தமது பிள்ளைகளென்றே ஒப்புக்கொண்டுவிட்டார். இனி உங்களுக்கு என் வெட்கம். உங்கள் வெட்கத்தையும் அபிமானத்தையும் தூர வீசுங்கள். உங்கள் இருதயத்தில் சகோதரநேசம் பொங்குகின்றது. உங்கள்தேகத்திலுள்ள நாம்பு முழுவதிலும் சகோதரநேசமே சுரந்துபாய்கின்றது. அந்தச் சகோதரநேசமே உங்கள் முகத்தில் வேர்வைகொள்ள அந்தச் சகோதரநேசமே உங்கள் சந்தோஷமான பார்வையிலும் இன்பமான புன்சிரிப்பிலும் சொட்டிச் சொட்டி வழிய அந்தச் சகோதரநேசத்தினால் வெறிபிடித்தாற்போல உங்கள் மனதில் ஆனந்தமும் உற்சாகமும் குபீர் குபீர் என்று ஊற்றெடுத்துப்பாய ஒருவர் கையில் ஒருவர் கோர்த்துக்கொண்டு நாங்கள் சகோதரர் நாங்கள் சகோதரர் என்று கத்துங்கள். அச்சமயம் ஆலயங்களில் ஆசாரியர் செய்யும் ஜெபங்களிலும் சந்நியாசிகள் பாடும் வைராக்கிய கீதங்களிலும் பார்க்கக் கடவுளுக்கு அதிக பிரியத்தை உண்டாக்கும். சபையார்களே, ஒரு ஊரிற் பிறந்த எல்லாருஞ் சகோதரர்களல்லவா, உங்களூரிலுள்ள பிறர் பாடுபட்டுச்செய்த நெல் முதலிய தானியங்களை நீங்கள் சாப்பிடவில்லையா, உங்கள் ஊரவர்கள் விற்கும் வஸ்திரத்தை நீங்கள் வாங்கி உடுக்கவில்லையா, உங்களூரிலுள்ள கொல்லர் செய்த இரும்பாயுதங்களை நீங்கள் தொட்டதில்லையா, உங்கள் ஊரிலுள்ள தட்டார்கள் செய்த ஆபரணங்களை நீங்கள் தரிக்கவில்லையா, உங்களுக்கு வியாதி வந்தபொழுது உங்களுக்கு ஒருவரும் மருந்து தரவில்லையா, உங்கள் குடும்பத்தில் எத்தனையோ வேலைகளை ஒருவருஞ் செய்து தரவில்லையா, இந்தஉதவிகளை இவர்கள் செய்யாவிட்டால் நீங்கள் உடனே காட்டிலே போய்ச் சந்நியாசிகளாய் இருக்கவேண்டுமேயன்றி உலகத்தில் ஒரு நிமிஷமும் சீவிக்க முடியுமா. 'செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு' என்றதுபோல இந்தச் சகோதரர்கள் இல்லாத அன்றைக்கல்லவோ இவர்களுடைய அருமை உங்களுக்குத் தெரியும். உங்கள் ஒவ்வொருவரையும் குடியில்லாத ஒவ்வொரு தீவில் கடவுள் கொண்டுபோய் விடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியஞ் செய்யும்பொழுது என்சகோதரர்களே என்சகோதரர்களே இந்தச் சமையத்தில் வந்து உதவிசெய்யமாட்டீர்களோ என்று புலம்புவீர்கள். றொபின்சன் குருசோ என்பவன் குடியில்லாத தீவிற் போய்ப் பட்டபாடு இங்கிலிஷ் படித்தவர்களின் ஞாபகத்திற்கு இன்னும் இருக்குமென்றே நினைக்கின்றேன்.

கனவான்களே, நீங்கள் இப்பொழுது ஒன்று சொல்லக்கூடும். ஊரவர்களெல்லாம சும்மா நமக்கு உதவி செய்கின்றார்களா. தட்டான் சும்மா நமக்கு நகை செய்து தருகின்றானா. தனக்கு இலாபத்துக்காகத்தானே செய்கின்றான். கொடுத்த பொன்னிலும் அரைவாசி எடுத்துக்கொண்டு மிச்சத்திலுஞ் செம்பைக் கலந்து பழுதாக்கித் தலைக்கு மிஞ்சின கூலியும் பிடித்தபிடியில் நம்மிடத்தில் வாங்குகிறானே. அவனையா நமக்கு உதவிசெய்யும் சகோதரன் என்று சொல்வது என்று சொல்லக்கூடும். தட்டான் தன் நன்மையைக் கருதியே நகைசெய்து தருகின்றானென்பது உண்மைதான். ஆனால் அவன் நகைசெய்து தராவிட்டால் உங்களுக்கு நகை கிடைக்கும் வழி வேறில்லை. தட்டானுடைய உதவியினாலேதான் நீங்கள் நகையணியக்கூடும், ஆகையால் அவன் உங்களுக்குச் செய்யும் உதவிக்காக நீங்களும் அவனுக்கு உதவி செய்யவேண்டும். அவனுக்குக் கூலிகொடுப்பதுடன் நீங்கள் அவனுக்குச்செய்ய வேண்டிய கடமை முடியவில்லை. உங்களில் ஒருவருக்கு அட்டியலும் காப்பும் தேவை. அவர் ஒரு தட்டானைக்கொண்டு முதல் அட்டியல் செய்விக்கின்றார். அதற்கு உடனே கூலி கொடுக்கின்றார். அச்சமையத்தில் அத்தட்டானைப் புலியொன்று கொல்லவருகின்றது. அவன் அவருடைய உதவியைக் கேட்கின்றான். அப்பொழுது நகை செய்வித்தவர் இத்தட்டான் நகை செய்துதந்த உதவிக்கு நானுங் கூலி கொடுத்துவிட்டேன். கடமைக்குக்கடமை தீர்ந்துவிட்டது. ஆகையால் புலியைத் துரத்தி இவனுக்கு உதவிசெய்யவேண்டிய அவசரமில்லை யென்று பேசாமலிருந்துவிடலாமா? பேசாமலிருந்துவிட்டால் தட்டானை புலி பிடித்துப்போடும். பின்பு ஆரைக்கொண்டு காப்புச் செய்விப்பது? பிறந்தநாள் தொடங்கி இறக்கும்வரையும் உங்களூரவர்களுடைய உதவி உங்களுக்குத் தேவையாயிருக்கிறது. ஆகையால் நீங்களும் உங்கள் சீவியகாலம் முழுவதும் உங்களூரவர்களுக்கு உதவியாய் இருக்கவேண்டும். உங்களூரவர்கள் நல்லநிலைபரத்திலிருந்தால்தான் உங்களுக்கு நல்லாய் உதவி செய்யக்கூடும். ஆதலால் நீங்கள் ஊரவர்களுடைய நன்மையை விரும்பி அவர்களை நல்ல நிலைபரத்தில் வைப்பதெல்லாம் பிற்பாடு உங்கள் நன்மைக்கே அநுகூலமாக இருக்கின்றது. இதுவரையும் நான் சொல்லியதிலிருந்து உங்கள் சரீரத்திலுள்ள அவயவங்கள் எப்படி ஒன்றுக்கொன்று துணையாய் இருக்கின்றனவோ உங்கள் குடும்பத்திலுள்ளவர்கள் எப்படி ஒருவருக்கொருவர் துணையாயிருக்கிறார்களோ அப்படியே ஒரு ஊரிலுள்ளவர்கள் ஒருவருக்கு ஒருவர் துணையாக இருக்கின்றனர் என்று விளங்குகின்றதல்லவா. (தொடரும்.)

---

## சுத்த தர்மமண்டலம் என்னும் சித்த புருஷர் சபை.

(நீதிபதி, எஸ். சுப்பிரமணிய ஐயர், "தியோஸபிஸ்ட்" பத்திரிகைக்கெழுதிய நிருபத்தின் மொழிபெயர்ப்பு.)

(முற்றொடர்.)

இச்சபை ஸ்தாபனமாயுள்ளசெய்தி இதுகாறும் அந்தரங்கத்தில் இருந்ததாயினும், பின்வரும் நியாயங்களுக்காக இனிமேல் அது வெளியாக்கப்படுத்தப்படல்வேண்டுமென்பது இச்சபையாரது விருப்பமாயிருக்கின்றது. அந்நியாயங்களாவன:—இந்த கலிவருட அந்தந்தோறும் ஒரு சிறிய காலசக்கரம் முடிதலாலும், இருபத்துநான்கு வருடம்கொண்ட அடுத்த காலசக்கரத்திலேஆன்மவிசாரமும் அனுபூதிஞானத்தில் ஆசையும் உடையோர் தொகை அதிகப்படுமென்னுங் குறிப்புத் தெரியக் கிடத்தலாலும், இச்சபையைச் சேர்ந்து ஞானசாதனஞ்செய்ய விருப்பமுள்ளவர்கள் அறியவேண்டிய சில உண்மைகளை வெளிப்படுத்தவேண்டியது சபையாருக்குக் கடமையாயிற்று. இந்து சாஸ்திரத்தாருள்ளே, ஏகாகைட்டிக மோகிகளாய்ப் புதிய முறைகளையெல்லாம் கழித்து நோக்கும் இயல்புடையோர், இச்சபையைச் சேர்ந்து ஞானசாதனஞ் செய்தற்கு மனமொருப்பட்டுவருவாரென்று சபையார் காத்திருக்கவில்லை. பின்னை, மேலைத்தேச முறைப்படி கல்வி பயிற்றப்பட்டவரும், பிரமவித்தையின் பெருமையையுணர்ந்து அதை மேலாகமதித்திருக்குங் குணமுடையோருமே, பெரும்பான்மை இச்சபையைச் சேர்ந்து சாதனிகளாதற்கு நாட்டங்கொள்வாரென்பது சபையாரது நம்பிக்கை.

சாதி, சமயம், வருணம், ஆச்சிரமம், ஆண், பெண் என்றபேதமின்றி எவருமிச்சபையைச் சேரலாம். இச்சபையின் முழு நோக்கமும் யாதெனில், உலகத்திலுள்ள சீவகோடிகளெல்லாம் சச்சிதானந்தவாழ்வைப் பெற்றுக் கடைத்தேறிப் போகவேண்டுமென்னும் பூரணகருணையும் கருத்தும் பொருந்தப்பெற்றுள்ள யோகீஸ்வரர் ஓர் தொகையினரை, முறைப்படி பயிற்றி, இப்பூமண்டலத்திலே, பூர்வம்போல எஞ்ஞான்றும் சிலரட்சைக் கிருத்தியத்தில் நிலைநிறுத்தி வைத்தல் வேண்டும் என்பதேயாம். "அநுட்டான சந்திரிகை"என்னும் நூலிலே மீட்டும் மீட்டும் இது வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. இந்நூல் ஞானனுபூதியை உள்ளபடி நாடிநிற்கும் சீடர் யாவர்க்கும் இன்றியமையாத அபூர்வ போதனைகளைக் கொண்டுடையது. இதில் நான்கு காண்டங்கள் உள்ளன. அவைகளுள் முதலாங் காண்டம், இச்சபையைச் சேர்ந்த சீடவர்க்கத்தாருள்ளே, நாசர் என்னும் முதற்படியில் நிற்போர் கைக்கொண்டொழுகவேண்டிய விதிமுறைகளையும், வேறு சில பொது விஷயங்களையும்பற்றிப் பேசும். இரண்டாங்காண்டம் தீர்த்தர் என்னும் இரண்டாம்படியில் நிற்பவர்களது அநுட்டானக் கிரமத்தைக் கூறும். இவ்விரண்டு காண்டங்களுமே தற்காலம் கையெழுத்திலிருக்கின்றன. பிரானுகர், ஆனந்தர், என்னும் எஞ்சிய இரண்டு வகுப்பினருக்கும் வாச்சிய முறையிற்செய்யப்படும் அந்தரங்க உபதேசங்களேயுதன் மூன்றும் நான்காம் காண்டங்களாகும். இவை இரண்டும் கையெழுத்திற்கிடையா. இவ்விரண்டுவகுப்பினரும், உபதேசங்களைப் பேறுங் காலங்களிலே தாம் குறித்து வைக்கும் ஞாபகக் குறிப்புகள்தாமும், ஒருபோதும் அவர்கள் கையைவிட்டுப் போவனவன்று. இவ்வந்தரங்க உபதேசங்களெல்லாம், அவைகளைப் பெற்றவர்கள் பிறருக்கு வெளிப்படுத்த முடியாத தன்மையுடையனவாயிருக்கின்றன.

இந்நூலின் முதலாம் இரண்டாம் காண்டங்களிலுள்ள விஷயங்களைப்பற்றி இவ்விடத்திற் சில கூறுவாம்:—முதலாங் காண்டத்தில் நான்கு அத்தியாயங்களுள. அவைகள், நாம் ஆரம்பத்திற் கூறிய சுத்த தர்மமண்டலமென்னும் வதிரிவனச் சித்தபுருஷர் சபையில் நடந்த வர்த்தமானங்களைப்பற்றியும், இன்னும் வேறுபலவிஷயங்களைப்பற்றியும் பேசும். இச் சுத்த தர்ம மண்டலத்துக்கு, பகவான் நாராயணர் தாமே அதிஷ்டாதா அல்லது தலைவராய் எழுந்தருளியிருக்கின்றார். நரதேவரே இதன் காரியதரிசி. இவர்களோடு இச் சபையில் இன்னும் ஏழு அதிகார புருஷர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வதிகார புருஷர்களுள், நாரதர் என்பவர் சத்தியலோகப் பிரதிநிதியாயும், யோகப்பிரமவித்தையின் உத்தம ஞானசிரியராயும் விளங்கியுள்ளார். வாமதேவர் என்பவர் தபலோகப் பிரதிநிதியாயும், யோகப்பிரமவித்தையைப் போதிக்கும் ஆசிரியவர்க்கத்தாருள்ளே, ஸ்ரீரைக்தபடியிலுள்ளோருக்குக் காலவகைக்குத் தக்கபடி தேவையானயட்டும் தத்துவார்த்த உபதேசங்களைச் செய்துவைக்கும் சிரேஷ்ட ஆசிரியராயும் விளங்கியுள்ளார். காசியப்பர் என்பவர் ஜனலோகப் பிரதிநிதியாயும், சீடவர்க்கத்தாருள்ளே யோகப்பிரமவித்தையின் ஆசிரியராய் இனிமேல் வரத்தக்க பக்குவக் குறியுடையோரைப் போஷித்து மேலேற்றும் கடமையைக் கைக்கொண்டு நடத்துபவராயும் விளங்கியுள்ளார். சந்தபாநு என்பார் மகர்லோகப் பிரதிநிதியாயும், யோகப்பிரமவித்தையின் அநுஷ்டானக் கிரமங்கள் செவ்வனே கைக்கொள்ளப்பட்டு வருகின்றனவோ என்பதை மேற்பார்க்கும் அதிகாரத்தைக்கொண்டுடையவராயும் விளங்கியுள்ளார். காலதேவரென்பார் சுவர்லோகப் பிரதிநிதியாயும், யோகப்பிரமவித்தையிற் பயின்று சாதனஞ்செய்துவருவார்க்குக் காலந்தோறும் உண்டாகும் இடையூறுகளை நிவிர்த்திசெய்யும் கடமையைக் கைக்கொண்டுடையராயும் விளங்கியுள்ளார். சுப்பிரமணியர் என்பார் புவர்லோகப்பிரதிநிதியாயும் யோகப்பிரமவித்தையின் ஆசிரியராயும், அவர் மாணாக்கரிடம் காரணதேகங்களைச் சுத்திசெய்யும் கிருத்தியத்தைக் கைமேற்று நடத்துபவராயும் விளங்கியுள்ளார். தேவாபியென்பார், பூலோகப் பிரதிநிதியாயும், பூலோகத்திலே யோகப்பிரமவித்தையோடு சம்பந்தப்பட்டுள்ளார் சகலரையும் ஆளுகின்ற அதிகாரியாய்ப்பகவான்நாராயணருக்குப் பதிலாக இவ்விடத்து இராஜரீகம் நடத்துபவராயும் விளங்கியுள்ளார். இவ்வதிகார புருஷரது திருநாமங்கள், அவரவர் கடமைகளைக் குறித்துக் காட்டும் நாமங்களாகவிருக்கின்றன. உதாரணமாக:—நாரதர் என்னும் நாமத்திலுள்ள "நார" என்னும் பதத்திற்கு, "தெய்வஞானம்" எனவும், "அஞ்ஞானம்" எனவும், இரண்டு அர்த்தங்கள் உண்டு. "த" என்னும் பதத்திற்கு, "கொடுத்தல்" எனவும், "அழித்தல்" எனவும் இரண்டு அர்த்தங்கள் உண்டு. ஆகவே, நாரதர் என்றால் அஞ்ஞானத்தைக் கெடுத்து மெய்ஞ்ஞானத்தைக் கொடுப்பவர் என்றதாயிற்று. இவ்வதிகாரபுருஷர் ஒவ்வொருவருக்கும் கீழே எவ்வேழாகப் பதினெட்டுச் சித்தபுருஷர்கள் உண்டு. இங்ஙனமாயுள்ள நாற்பத்தாறு சித்தபுருஷர்களுடைய திருநாமங்களையும் அநுட்டான சந்திரிகை யென்னும் நூலிலே காணலாம். இவர்களேயல்லாமல், இவர்கள் யாவரிலும் மேற்பட்டவரும், பகவான் நாராயணருக்கு அடுத்தபடியில்நிற்பவருமாயுள்ள மூப்பத்திரண்டு சித்தபுருஷர் இப்பூமண்டலத்திலே வெவ்வேறு பாகங்களிலே பகவான் நாராயணருக்குப் பதிலாக ஞானஅரசு செலுத்திக்கொண்டிருக்கின்றனர் (தொடரும்.) அ.


விளம்பரம்.

## இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங் கியாதிபெற்றுக் கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

**1 கேர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.**
இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்பஉற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அக்கோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.
௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௧.

**2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.**
இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.
௨௨ நாள் மருந்தின் கிரயம் ரூ ௨, அணா ௮,

**3 பிரமேக வியாதிக்குச் சத்துச் செந்தூரம்.**
எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினுல் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.
௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௨.

**4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.**
சரீரத்தின் எந்த இடத்திலும் நடிக் குத்தும் வாய்வுகளுக்கும் மற்றை எவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தே காண்டீபம். ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.
௧௪ மாத்திரை புட்டி ஒன்று ரூ ௧, அணா ௮.

**5. மேகசஞ்சீவிச் சூரணம்.**
மேகநோயுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும்.
௨௨ நாள் மருந்து ரூ ௨.

**6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.**
அன்னத்துவேஷம், பித்தக்கிறகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔடதம்.
௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூ ௧, அணா ௮.

**7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்**
எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும்.
௨௨ நாள் மருந்து ரூ ௨.

**8. மூலிகை ரத்தினத் தைலம்.**
அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாருது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ 1.

**9. பரிமள பற்பொடி.**
பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப் போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் சேட்கும்.
டப்பி 1 க்கு ரூ 0-4-0 டஜன் 1 க்கு ரூ 2-12-0.

**10. படர்மேக சங்காரி வெண்ணெய்.**
மேகநோயால் தேகத்தில்விழும் எவ்வித பத்துப் படைகளையும் ௩ வேளையிற் குணமாக்கும்.
டப்பி ௧-க்கு அணா ௪. டஜன் ௧-க்கு ரூ ௨, அ. அ.
எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

**தவறுதீர்கள்! இதுசமையம்!! தவறுதீர்கள்!!**
**உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.**

(௧) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினுல் இன்னின்ன காலத்தில் இன்ன வயதிலுன் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்னவிதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(௨) ௧. ஆயுட்பாகம், ௨. எந்தவிதத்தினுல் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ௫. அது முனனு பின்னு, ௬. புத்திரனுண்டா, ௭. தனம் வைத்துப் போவேனு, ௮. மரணமாகுமிடம் சுயதேசமா, ௯. சொந்தவீடு நிலம் கிட்டுமா, ௧௦. கடன் எப்போது நிவிர்த்தியாகும், ௧௧. விவகாரம் ஜெயமாகுமா, ௧௨. நினைத்தகாரியம் முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ ௧.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
௧௨ பாகம் சார்ஜ் ரூ ௫.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி, போஸ்றில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம் எழுதினுற் ஜோதிஷ, வைத்திய "கேட்லாக்" இனுமாக அனுப்புவோம்.

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம்,வைத்தியம்,
மேலச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.


---

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

☞ Printed and published by S. KandiahPillai, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.